கருணையோடு கவனித்து இருக்கும்போது இந்த 400 பேர்களுடைய —கிளார்க், அசிஸ்டன்ட், சூப்பிரண்டென்டென்ட் போன்றவர் களுடைய பணிகளை நிரந்தரமாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

4. அறிவிப்பு.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 27—3—1974-ம் நாளன்று விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுததுக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன 3—4—1974-ம் நாளன்றும், 3—4—1974-ம் நாளன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண்கள் 24—தொழில்கள், 26—கைத்தறியும் துணித் தொழிலும், 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு, 13—நீதி நிர்வாகம், 14—சிறைச்சாலைகள் ஆகியவை 27—3—1974-ம் நாளன்று இரு வேளைகளிலும் எடுத்துக்கொள்ளப்படும்.

மேலும், 30—3—1974-ம் நாளன்று விவாதத்திற்கும் வாக்கெடுப் பிற்கும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண் 8—தேர்தல்கள், 9—மாநில ஆட்சித் தலைவர், 3—மாநில ஆயத் தீர்வை, 5—முத்திரைத் தாள்கள், நிர்வாகம், 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிர்வாகம் ஆகியவை 1—4—1974-ம் நாளன்றும், 1—4—1974-ம் நாளன்று எடுத்துக்கொளளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண் 24—தொழில்கள், 26—கைத்தறியும் துணித் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், 42—பல்வகை. 45—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும், 46—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு, 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் ஆகியவை 27—3—1974-ம் நாளன்று இரு வேளைகளிலும் எடுத்துக்கொள்ளப் அறிவிக்கிறேன்.